சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.51/2016

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – மாரிச்செல்வம் (Dw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 10.01.1967-ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள இடத்திற்கு பிரதிவாதியின் தந்தை பாண்டியன் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (ஆவண எண்.20/1967) அசல் **பி.வா.சா.ஆ.1,** 01.11.1988-ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள இடத்தினை பொறுத்து மேற்படி பாண்டியன் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள உயில் சாசனம் (ஆவண எண்.30/1988) கணனி நகல் SRO Copy **பி.வா.சா.ஆ.2,** அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட 09.05.2002-ம் தேதியிட்ட பாண்டியனின் இறப்பு சான்று நகல் **பி.வா.சா.ஆ.3,** அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட 09.05.2002-ம் தேதியிட்ட பாண்டியனின் வாரிசு சான்று நகல் **பி.வா.சா.ஆ.4,** 18.01.2011-ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள இடத்தில் ஒரு பகுதிக்கு பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா

அசல் **பி.வா.சா.ஆ.5,** 18.01.2011–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள இடத்தில் ஒரு பகுதி சொத்திற்கு அன்னம்மாள் பெயரில் உள்ள பட்டா அசல் **பி.வா.சா.ஆ.6,** 18.01.2011–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள மற்றொரு பகுதிக்கு பிரதிவாதியின் தாயார் பழனியம்மாள் பெயரில் உள்ள பட்டா அசல் **பி.வா.சா.ஆ.7,** 18.01.2011–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள மற்றொரு பகுதிக்கு பிரதிவாதியின் மனைவி ஜோதிலட்சுமி பெயரில் உள்ள பட்டா அசல் **பி.வா.சா.ஆ.8,** அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட பிரதிவாதியின் ஆதார் கார்டு நகல் **பி.வா.சா.ஆ.9,** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.